ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி எ. ப்ரமோதூத வரு வைகாசிமீ பகுதி ரு

Vol 7. *May & June 1930.* No. 5.

ஈட்டிற்கண்ட ஐதிஹ்யம்.

க-ம் பத்து.

க-ம் திருவாய்மொழி—உயர்வற.

(1) "அஹமஸ்யாவரோ ப்ராதா குணைர்தாஸ்யமுபாகத:" என்னுமாப்போலே திருவடி, இளையபெருமாளை 'நீர் இவர்க்கென்னுவீர்'! என்ன 'பெருமாளும ஒரு படியாக நினைத்திருப்பர்; நானுமொருபடியாக நினைத்திருப்பேன்' அவர் 'நினைத்திருக்கும்படியென்' என்ன; அவர் தம் பின் பிறந்தவனென்றிருப்பர்; நான் அவர் குணங்களுக்குத் தோற்று அடியேனாயிருப்பன்' என்றாரிறே.

---

(1) ஆழ்வார் "உயர்வற வுயர்நலமுடையவன்...துயரறு சுடரடி தொழுதெழென்மனனே" என்று எம்பெருமானுடைய குணங்களில் ஈடுபட்டுத் தம்மனத்தைநோக்கி 'அவன திருவடிகளை வணங்குவாய்' என்று அருளுகிறவிடத்தில் இந்த ஐதிஹ்யம் குறிப்பிடப்பெற்றுளது. "அஹமஸ்ய" என்பதின் பொருளாவது:-அஸ்ய-இந்தராமனுக்கு, அஹம் அவரோப்ராதா-நான் பின் பிறந்த தம்பி, குணை:- அவர் குணங்களால், தாஸ்யமுபாகத:- கைங்கர்யஞ் செய்துகொண்டிருக்கிறேன்; என்பதாம். திருவடி-அநுமான் இளைய பெருமாள்-லக்ஷ்மணன். அநுமான் இளையபெருமாளைச் சந்தித்த போது அநுமானுக்கு ஓர் ஸம்சயமுண்டாயிற்று அஃதாவது-இராம

(2) "உடையவன்" குணங்கள் தன்னை அஸ்தியென்று விடு மளவன்றிக்கே இவற்றையிட்டு நிரூபிக்கும்படியாயிருக்கும். அஃதாவது-ஆகந்துகமன்றிக்கே ஸ்வரூபாநுபந்தியாயிருக்குமென்றபடி. ஆழ்வான் பிள்ளைப் பிள்ளையைப்பார்த்து "நிர்க்குணமென்றிருப்பார் மிடற்றைப் பிடித்தாப்போலே ஆழ்வார் 'நலமுடையவன்' என்றபடி கண்டாயே" என்று பணித்தான். இத்தால் "ஸமஸ்த கல்யாண்குணாத்மகோஸௌ" என்றபடி.

பிரான் பிதுர்வாக்ய பரிபாலனஞ் செய்வதற்காக இங்குவந்தார்; பதியாகிய கணவனுக்குப் பணிவிடை செய்யவேண்டிய கடமையை முன்னிட்டுப் பிராட்டிவந்தாள்; இந்த லக்ஷ்மணன் இவர்களோடு கூடி வருவதற்குக் காரணம் யாதென்பதாம். இந்த ஸம்சயம் நீங்கு வதற்கு அநுமான் இளையபெருமாளை நோக்கி வினவினர். அதற்கு இளையபெருமாள் இராமபிரான் என்னைத் தம்பியாகக் கருதுவர்; யான் அவருக்குத் தாஸனென்றிருப்பன் என்றார். தம்பியென்பவன் பிதுரரால் ஈட்டப்பெற்ற பொருள்களைப் பங்கிட்டுப்பெற்று மூத்தவனோடொத்த மதிப்புடையவனாயிருப்பவனாவான். இதுபற்றியே பெரியார்கள் ப்ராத்ருத்வத்தைத் தோள்தீண்டியானவாகாரம் என்றுரைப்பர்கள். இராமபிரான் இளையபெருமாளைத் தம்மோடொத்த மதிப்பாளராகக் கருதினர். இவர் கருத்தை உட்கொண்டு இளையபெருமாள் இவருடன் கூடிவரவில்லை, தம் கருத்தால் தம்மை இராமபிரானுக்குத் தாஸனாகக் கருதினராதலால் அவருடன் கூடி அவருக்குப் பணிவிடை செய்யவந்தார். தாஸத்வமாவது-க்ரயவிக்ரயங்கட்குரிமையாயிருத்தல்.

(2) அஸ்தியென்று விடுமளவன்றிக்கே என்றது இருக்கிறதென்று சொல்லிவிடுவதன்றிக்கே என்றவாறு. இவற்றையிட்டு நிரூபிக்கும்படியாயிருக்கும் என்றது குணங்களைக் கொண்டு குறிப்பிட்டுக் காட்டலாம்படியிருக்கும் என்றவாறு கரியசாத்தன் என்றால் கருமை சாத்தனைக் குறிப்பிட்டுக் காட்டுவதற்கு அறிகுறியாயிருப்பதுபோல, குணங்கள் ஸர்வேசுவரனைக் குறிப்பிட்டுக் காட்டுவதற்கு அறிகுறியாயிருக்கும். ஆகந்துகமன்றிக்கே என்றது இடையிலே யுண்டானதன்றிக்கே என்றவாறு. ஸ்வரூபாநுபந்தியாயிருக்கும்

(3) "மயர்வற" இத்யாதி ஜ்ஞாநாநுதயம், அந்யதாஜ்ஞாநம், விபரீதஜ்ஞாநம் என்கிறவிவை வாஸனையோடே போம்படியாக. ஜ்ஞாநாநுதயமாவது- தேகாத்மாபிமானம். அந்யதாஜ்ஞாநமாவது- தேவதாந்தர சேஷமென்றிருக்கை. விபரீதஜ்ஞாநமாவது-ஸ்வதந்த்ரமாகவும் ஸ்வபோக்யமாகவும் நினைத்திருக்கிற கேவலனுடைய ஜ்ஞாநம்; என்று நம்பிள்ளை யருளிச்செய்வர். தம் வாயாலே "மயர்வற" என்று சொல்லலாம்படி காணும் அவன்றான் இவருக்கு அஜ்ஞாநத்தை வாசனையோடே போக்கினபடி

(4) "மதிநலம்" 'ஜ்ஞாநபக்திகளிரண்டையும் தந்தான்' என்று நிர்வஹிப்பாருமுண்டு; அன்றிக்கே 'நலமான மதியைத் தந்தான் என்றாய் முளைக்கும்போதே வயிரம்பற்றி முளைக்கும் பதார்த்தம்போலே பக்திரூபாபந்நஜ்ஞானத்தைத் தந்தானென்கிறார்; என்று

என்றது வஸ்துவினிடத்தில் இயல்பாயிருக்குமென்றவாறு. ஆழ்வான் என்றது கூரத்தாழ்வானை. பிள்ளைப்பிள்ளை-பிள்ளைப்பிள்ளையாழ்வான் கூரத்தாழ்வான் சிஷ்யர். நிர்க்குணமென்றிருப்பார்-பிர்ம்மத்திற்குக் குணமில்லை என்று சொல்கிற அத்வைதிகள். மிடறு-கழுத்து. நலமுடையவன்-ஆநந்தகுணமுடையவன். பணித்தார்-அருளிச்செய்தார். இத்தால் என்றது ஆழ்வார் 'நலமுடையவன்' என்று அருளிச்செய்ததினால் என்றவாறு, "ஸமஸ்த கல்யாணகுணாத்மகோஸௌ" என்பது விஷ்ணுபுராணத்திற் கண்டது. இதன் பொருளாவது-இந்த ஸர்வேசுவரன் எல்லாக் கல்யாண குணங்களையும் இயல்பாகவே யுடையவன் என்பதாம்.

(3) தேகாத்மாபிமானமாவது-அநித்யமான தேகத்தை நித்யமான ஆத்மாவென்றபிமானிக்கை. தேவதாந்தர சேஷமாகையாவது-ஸர்வேசுவரனை யொழிந்த அன்னியதெய்வங்கட்கு அடிமையாயிருப்பதாம். ஸ்வதந்த்ரமாவது-தனக்கே உரிமையாயிருத்தலாம். ஸ்வபோக்யமாவது- தனக்கே இனிமையாயிருப்பதாம். கேவலன் கைவல்யன்; ஆத்மாநுபவமே புருஷார்த்தமென்றிருப்பவன். தம் வாயாலே-ஆழ்வார் தம் திருவாக்காலே.

(4) மதிநலம் உம்மைத்தொகை. மதியும் நலமுமென விரியும். நிர்வஹிப்பாருமுண்டு என்றது பொருள் முடிவு கூறுவாருமுண்டு

பட்டாருளிச் செய்யும்படி. கர்மஜ்ஞாநாநுக்ருஹீதையான பக்திஸ்தானத்திலே பகவத்ப்ரஸாதமாய் அநந்தரம் கைங்கர்யத்துக்குப் பூர்வக்ஷண வர்த்தியான பக்தியாயிற்றிவரது. 'ஆழ்வார் ப்ரபந்நரோ? பக்திநிஷ்டரோ? என்று எம்பாரைச் சிலர்கேட்க, 'ஆழ்வார் ப்ரபந்நர், பக்தி யிவருக்குத் தேகயாத்ராசேஷம்' என்றருளிச்செய்தார். என்போலவென்னில்; நாழுமெல்லாம் ப்ரபந்நராயிருக்கச்செய்தே ஆண்டாறுமாசத்துக்கு ஜீவனம் தேடுகிறுப்போலே, "உண்ணுஞ் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்" இறே இவருக்கு

என்றவாறு. இப்பொருள் ஜ்ஞானமுண்டாகி அதன்பின் பக்தியுண்டாகவேண்டுமென்ற முறையைப் பற்றியது. பட்டர் மதிநலமென்பதை முன் பின்னாகக் கூட்டிப் பண்புத்தொகையாக நலமான மதியென்று பொருள் கொண்டார் ஆனால் ஜ்ஞானமுண்டாகி அதன்பின்னர் பக்தியுண்டாக வேண்டுமன்றோ! முதலிலே பக்தியுண்டாவதெப்படி? என்ற ஐயம் நிகழ அதற்குச் சமாதானமாக முளைக்கும்போதே வயிரமபற்றி முளைக்கும பதார்த்தம்போலே என்ற உவமை எடுத்துக் காட்டினார். முளைக்கும்போதே வயிரம்பற்றி முளைக்கும் பதார்த்தமாவது-கருங்காலிமுதலியன. பக்திரூபாபந்நஜ்ஞாநம்-பக்தி வடிவினதாயடைந்த அறிவு. கர்மஜ்ஞாநாநுக்ரஹீதையான பக்தியாவது-கர்மஜ்ஞாநத்தாற் பெற்ற பக்தியாம் சாஸ்திரங்களில் விதிக்கப்பெற்ற கர்மங்களை அநுஷ்டித்தால் இந்திரிய நிக்ரஹமுண்டாகும். அதனால்மனமாசறும். அதனால்ஜ்ஞாநமுண்டாகும். அதனமேல்பக்தி பிறக்கும். இம்முறைப்படி ஆழ்வாருக்குப் பக்தியுண்டாகவில்லை. கர்மஜ்ஞாநத்தாலுண்டாகும் பக்தியின் ஸ்தானத்தில் பகவத் கிருபையிருந்து அதன்மேலுண்டாகிய பக்தியாகும் ஆழ்வாருக்குண்டாகிய பக்தி, கைங்கர்யத்துக்குப் பூர்வக்ஷண விர்த்தியான பக்தியாவது-பணிவிடைக்கு முன்னே நிகழ்கிற பக்தியாம், ஈசுவர விஷயமான அன்பிருந்தாலொழிய அவன் விஷயமான பணிவிடை செய்தற்கியலாது. ஆதலால் பணிவிடைக்கு முன்னிகழ்வது பக்தி என்பது பெறப்படும்.

ஆழ்வார் ப்ரபந்நரோ? பக்திநிஷ்டரோ? என்று சிலருக்குண்டாகிய ஸம்சயம் நீழவருமாறு காண்க. ஆழ்வாருக்குப் புருஷோத்தமனாகிய எம்பெருமான் விஷயமாக உண்டாகிய பக்தியானது அவர் தம் நிலைமையை மாற்றி, ஒரு தலைவியாம் நிலைமையைப் பிறப்பிக்க அதனால் ஆழ்வார் தலைவியாகவிருந்து அருளிய பாடல்கள் பலகாணலாம். ஆதலால் இவா பக்தரென்றும் கொள்வதற்கு இடந்தருகிறது.

௫-ம் பாட்டு—நின்றனர்.

(5) "நின்றனர்" இத்யாதி 'ப்ரவ்ருத்தி அவனதீனமாகிறது வேணுமாகில் நிவ்ருத்திக்கவன் வேணுமோ' என்றெம்பாரைக் கேட்க, 'ஸ்வர்க்கத்தினின்றும் விழுகிற திரிசங்குவைச் சக்திமான் நிற்கச்சொல்ல நிற்கவேண்டிற்றுக் கண்டாயே; அப்படியே நிவ்ருத்திக்குமவன் வேணுங்காண்' என்றருளிச்செய்தார்.

இஃதன்றி எம்பெருமானுடைய பரிபூர்ணாநுக்ரஹத்திற்கு ஆழ்வார் பாத்திரராய்ப் பூர்ணாதிகாரியாய் விளங்கினாராதலால் இவரைப் பிரபந்நராகக் கொள்வதற்கு மிடமுண்டு. இவ்விரண்டு கொள்கையுள் எதைக் கொள்வதென்ற ஸம்சயமுண்டாயிற்று. இதைப்பற்றிக் கொள்வதற்கே எம்பாரை வினவினார்கள். எம்பார் ஆழ்வார் ப்ரபந்நரென்று தெளிவாக அருளிச்செய்தார். ப்ரபந்நராவரெல்லாப் பொறுப்புக்களையும் பகவானிடத்தில் விடுத்துத் தம்நன்மைக்கோர் முயற்சியுஞ் செய்யாதிருப்பவர். ஆனால் இவருக்குப் பக்தியிருந்ததேயென்னில்; பக்தி இவருக்குத் தேகயாத்திராசேஷமாயிருக்குமென்றார். தேகயாத்திரை-தேகஜீவனம். அஃதாவது-தேகம் நிலைத்திருக்கும் நிமித்தமாக உணவுப்பொருள்களை உண்பதாம். ஆழ்வார் நம்மைப்போல உணவுப் பொருள்களையுண்ணாது "உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்" என்று பகவதநுபவமே தாரகமாகக் கொண்டிருந்தாராதலால் இவருக்குத் தேகயாத்திரை பகவதநுபவம். இவ்வநுபவம் தேகயாத்திரை யாவதற்குக் காரணமாயிருந்தது பக்தியாதலால் பக்தி இருவருக்குத் தேகயாத்திராசேஷமென்று சொல்லப்பட்டது. காலமெல்லாம் ப்ரபந்நராயிருக்கச்செய்தேயும் என்றது காலமெல்லாம் எல்லாவற்றையும் விட்டவர்களாயிருக்கச் செய்தேயும் என்றவாறு. ஆண்டாறு மாசத்துக்கு ஜீவனம் தேடுகிறாப்போல என்றது தேகம் நிலைத்திருக்கும் நிமித்தமாக உணவுப்பொருள்களை ஒருவருஷத்திற்கும், ஆறுமாதத்திற்கும் தேடுமாப்போல என்றவாறு. நதிமாத்ருகமென்றும் தேவமாத்ருகமென்றும் பூமியினை இரண்டு வகையாகப் பிரித்துரைப்பார்கள். அவற்றுள் நதிமாத்ருகமாவது-நதிக்கரையைச் சார்ந்துள்ள பூமி. இந்தப் பூமியில் வருஷத்திற்கு இரண்டு முறைவிளையும். இதனையுடையார் ஆறுமாதத்திற்கொருமுறை ஜீவனந்தேடுவார்கள். தேவமாத்ருகமாவது-நதியினைச் சாராத பூமி. இதில் வருஷத்திற்கொருமுறைவிளையும். இதனையுடையார் வருஷத்திற்கொருமுறை ஜீவனந்தேடுவார்கள்.

(5) இந்த லீலா விபூதியின் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளும் எம்பெருமானுடைய சங்கற்பத்திலடங்கினவையாயிருக்குமென்று "நின்றனர்" என்ற பாட்டின் பொருள்முடிவுரைக்கின்ற விடத்தில்

உ-ம் திருவாய்மொழி—வீடுமின்முற்றவும்.

ப்ரவேசம்.

(6) 'ஒருவனுக்கு வைஷ்ணவத்வமுண்டு, இல்லை என்னுமிடந் தனக்கே தெரியுங்காண்' என்று ஜீயர் பலகாலுமருளிச் செய்வர்; பிறர் அனர்த்தங் கண்டால் ஐயோ! என்றிருந்தானாகில் 'நமக்குப் பகவத் சம்பந்த முண்டென்றிருக்க வடுக்கும்; இத்தனையும் பட்டிடுவானுக்கு என்றிருந்தானாகில் நமக்குப் பகவத் சம்பந்த மில்லையென்றிருக்கும்' என்று.

எம்பாரருளிய சமாதானம் குறிப்பிடப்பெற்றுளது. முயற்சி எம்பெருமானுடைய சங்கற்பத்திலடங்கின தென்பதை ஒப்புகொண்டாலும், நிவ்ருத்தியென்பதுவியாபார ஸாமான்யதையைக்குறிப்பிடும்; அஃதாவது-சும்மாவிருத்தலைக்காட்டும்; இதுவும் அவனுடைய அதீனமாயிருக்குமென்பது எவ்வாறு பொருந்துமெனபது கேள்வி கேட்டவர்களின் அபிப்பிராயமாகும். அதற்கு எம்பார் திரிசங்கு விருத்தாந்தத்தை எடுத்துக் காட்டினார். திரிசங்கு, விசுவாமித்ரரை நோக்கி "இச்சரீரத்தோடு ஸ்வர்க்கம்புகும்படி ஓர்யாகமியற்றுவீர்" என்று என் குலகுருவாகிய வஸிஷ்டரை வேண்டிநின்றேன்; அதற்கவர் சம்மதிக்காமல் என்னை நீசனாகச் சபித்துவிட்டார்; இனித் தேவரீராவது யான் ஸ்வர்க்கம் புகும்படி செய்தருள வேண்டுமென்று வேண்டி நின்றான். அதற்கு விசுவாமித்திரர் இசைந்து ஓர் யாகஞ் செய்து திரிசங்குவை ஸ்வர்த்திற்கனுப்பினார். ஸ்வர்க்கத்திலுள்ளவர்கள் 'நீசன் வருகிறான்' என்று திரிசங்குவைத் தலைகீழாகத் தள்ளிவிட, அதுகண்ட விசுவாமித்திரர் அவன் அப்படியே நிற்கும்படி தம் தபோமகிமையாற் செய்தனர். இங்கு ஸ்வர்க்கத்தினின்றும் விழுகிற ப்ரவ்ருத்திக்கு விழாமை நிவ்ருத்தியாம். விழாதிருத்தல் திரிசங்குவிற்கு இஷ்டமானாலும், அதைத் தன்னாற் செய்தற்கியலவில்லை. சக்தியுடைய விசுவாமித்திரராலே செய்தற்கிசைந்தது அதுபோல நிவ்ருத்தியும் ஈசுவரனுடைய சங்கற்பத்தாலாகவேண்டுமென்பது தெளிவாம்.

(6) ஆழ்வார் "உயர்வற என்ற திருவாய்மொழியில் ஸர்வேசுவரனுடைய பரத்வநிலையை அநுபவித்துக் களித்தனர். அதன்மேல் 'நாம் இவ்விஷயத்தைத் தனிமையாக அநுபவித்தல் கூடாது; இதற்குத் தகுதியானவர்களையுஞ் சேர்த்துக்கொண்டநுபவிப்போம்' என்று உலகத்தைப் பார்த்தார். உலகத்திலுள்ளவர்கள் இதர விஷயங்களில் மண்டிநின்றுழல்வதைக்கண்டு ஐயோ! என்றிரங்கி அவர்களை நோக்கி உபதேசிக்கத் தொடங்குகிறவிடத்தில் இவ்விஷயம்

எ-ம் பாட்டு—அடங்கெழில்,

(7) *(சம்பந்த ஜ்ஞானமே வேண்டுவது என்பதற்கோர்) திருஷ்டாந்தம் ஒரு வியாபாரி ஸ்திரீ கர்ப்பிணியான சமயத்திலே அர்த்தார்ஜனம் பண்ணவேணுமென்று போவது; அவளும் பிள்ளைபெற்று அவனும் பக்வனாய்த் தனக்கும் தமப்பனுருடைய வியாபாரமே யாத்திரையாய், அவனும் போய் இருவரும் சரக்குப் பிடித்துக்கொண்டுவந்து ஒரு பந்தலிலே தங்குவது; அதிருவருக்குமிடம் போதாமையாலே அம்பறுத்தெய்ய வேண்டும்படி விவாதம் ப்ரஸ்துதமான சமயத்திலே, இருவரையுமறிவானொருவன் வந்து 'இவன் உன்பிதா, நீயவன் புத்திரன்' என்றறிவித்தால், கீழ் இழந்த நாளைக்குச் சோகித்து, இருவர் சரக்குமொன்றாய், அவன் ரக்ஷகனாய் இவன் ரக்ஷியமாய் அந்வயித்து விடுமிறே. "ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே" ஜீவாத்மாவும் பரமாத்மாவும் தேஹமாகிற விருக்ஷத்தைப்பற்றி யிருந்தால், ஒருவன் கர்ம பலத்தைப் புஜியாநிற்கும்; ஒருவன் புஜிப்பித்து விளங்காநிற்கும்; அவன் நியாமகன்; நாம் நியாம்யமென்னும் முறையறியவே பொருந்தலாமிறே.

(மற்றொரு திருஷ்டாந்தம்) ஒரு ராஜபுத்திரன் உத்யான வனத்தைக்கண்டு புகவஞ்சினால் 'உன் தமப்பனதுகாண்' என்னவே நினைத்தபடி புக்குப் பரிமாறலாமிறே.

குறிப்பிடப்பெற்றுளது. எம்பெருமான் எல்லாரிடத்திலும் அருளுடையவனாயிருப்பவனாதலால், அவனருள்பெற்ற ஆழ்வாரும் அருளுடையவராயிருந்தார். இதனால் வைஷ்ணவராயிருப்பாரனைவரும் அருளுடையவராயிருத்தல் வேண்டுமென்பதைவலியுறுத்துவதற்கே ஜீயர் பலகாலும் அருளிச்செய்தார். இத்தனையும் பட்டிடுவானுக்கு என்றது இவ்வளவு அநர்த்தமும் படக்கடவன் என்றவாறு.

(7)[a] ஆழ்வார் "பற்றிலனீசனும் என்ற பாட்டில் ஸர்வேசுவரன் எல்லாரிடத்திலும் மிகுந்த அன்புடையவனாயிருக்கின்றானாதலால் எல்லீரும் அவனைப்பற்றுவீர் என்றுபதேசித்தார். அப்பொழுது சம்சாரிகள் ஆழ்வார் தம்மைநோக்கி, கடலலைக்குத் துரும்பைத் தள்ளிவிடவேண்டுமென்றும், துரும்பிற்கு அலையால் தள்ளப்படுவோமென்றும் நினைவில்லாதிருந்தாலும் அலைமே லலையடிக்கத் துரும்பு தானே கரையடைவதுபோல, ஸர்வேசுவரனுக்குளங்களை அகற்றிவிட

கூம் பாட்டு—ஓடுங்கவவன்கண்.

(8) ஓாயனத்தினன்று குன்றத்துச் சீயர், எம்பெருமானார் ஸ்ரீபாதத்திலே புக அவருடைய திருப்பெயரைச் சொல்லி 'சிங்கப்பிரான் இன்றயனங்கிடாய்' என்ன, திருவுள்ளத்திலோடுகிறது இன்னதென்றறியாமையாலே அவர் பேசாதிருக்க, 'இத்தேகசமனந்தரத்திலே ப்ராப்தி கண்ணழிவற்றபின்பு நடுவு விரோதியாய்ச் செல்லுகிற நாளிலே ஓராண்டு கழியப்பெற்றவித்து, உனக்கொன்று மிருந்ததில்லையோ! என்றருளிச்செய்தார்.

வேண்டுமென்றும் எங்கட்கு அவனுலகற்றப்படுவோமென்று எண்ணமில்லாதிருந்தாலும் அவனுடைய ஐசுவர்யமானது எங்களை அகற்றிவிடுமன்றோ என்று கேட்பதாக அபிப்பிராயங்கொண்டு, அதற்குச் சமாதானமாக எம்பெருமான் விஷயமான ஸம்பந்தஜ்ஞானமிருந்தால் அவனை யடையுவாமென்கிற விடத்தில் இக்கதை குறிப்பிடப்பெற்றுளது. அம்பறுத தெய்வவேண்டும்படி-அம்பைத் தூணியினின்றும் வாங்கி எய்யும்படி. கர்மபலம்-புண்ணியபாபரூபமாகிய பழம். நியாமகன்-ஏவுகின்றவன். நியாம்யன்-ஏவப்படுகின்றவன்

இங்குத் தார்ஷ்டாந்திகத்தில், ஜீவாத்மா பரமாத்மா என்கிற பக்ஷிகள் கூடியிருக்கிற சமயத்தில் பரமாத்மாவாகிய பக்ஷி ஜீவாத்மாவாகிய பக்ஷியை நோக்கி 'நீ எனக்கு அடிமையாயிருத்தற்குரியன்' என்ன, ஜீவாத்மா எனக்கு நானே உரியவன் என்ன, அப்பொழுது பரமாத்மா வெறுப்புற்று இருவரும் இங்ஙனம் பிணங்குகிற சமயத்தில் ஜீவாத்ம பரமாத்மாக்களின் ஸம்பந்தமறிந்த ஆசார்யன் வந்து ஜீவாத்மாவை நோக்கி 'நீ இவனுக்கடிமை; இவன் உனக்குத் தலைவன்' என்று ஸம்பந்தத்தை யுணர்த்தித் தம்முபதேசத்தாலே திருத்தி, பரமாத்மாவை நோக்கி 'தேவரீருக்குச் சேஷமான இவ்வாத்மாவை அபராதங்களைக் கண்டு அகற்றிவிடலாகாது' என்று அவன் திருவடிகளிலே சரணம்புகுந்து பொறுக்கும்படி செய்வான் என்று கொள்ளத்தக்கது.

(8) ஸர்வேசுவரனிடத்திற் சேர்ந்தால் அறிவுக்குறைவும் அதற்குக் காரணமான அவித்யாதிகளுமெல்லாம் தன்னடையே விட்

(9) எம்பார் ஒருருவிலே "பின்னுமாக்கை விடும்பொழுதென்னே" என்று, இங்ஙனே காரணமானது கழிந்தபோதே கார்யமும் தன்னடையே கழிந்ததேயன்றோ! ப்ராப்தியும் இனிக்கை புகுந்ததேயன்றோ! 'இனி, சிந்தா விஷயமுண்டோ?' என்றருளிச் செய்தார்.

டொழியும்; அதன்மேல் இந்தச் சரீரசம்பந்தம் அகன்றுபோகிற தினம் எப்பொழுதென்பதை எதிர்பார்த்துக்கொண்டிருக்கவேண்டுமென்பது இந்த "ஒடுங்க" என்ற பாட்டின பொருளாம். இங்குச் சரீர சம்பந்தம் விட்டொழிவதை எதிர் ார்த்துக் கொண்டிருக்க வேண்டுமென்பதற்கே இந்த ஐதிஹ்யம் குறிப்பிடப்பெற்றது. அயனம்-உத்தராயணம், தக்ஷிணாயனமென்ற இரண்டிலொன்று. ஸ்ரீபாதத்திலே புக-திருவடிகளை வணங்கி நிற்க விசேஷ தினங்களில் பெரியோர்களைக் கண்டு வணங்குவதென்பது அடிப்பட்ட வழக்கு, 'அயனங்கிடாய்' என்பதில கிடாய் என்பது வாக்யாலங்காரம். திருவுள்ளததிலோடுகிறது இன்னதென்றறியாமையாலே என்றது 'அயனங்கிடாய்' என்று இன்ன பொருளைக் கருதி அருளினாரென்று தெரியாமையாலே என்றவாறு. இந்ததேகசமனந்தரத்திலே எனறது இந்தத் தேகங் கழிந்தவுடனே எனறவாறு. ப்ராப்தி-பலப்ராப்தி, கண்ணழிவற்ற பினபு-குறைவற்றபின்பு. உனக்கொன்றுமிருந்ததில்லையோவென்றது உனக்கொரு ப்ரயோஜனமாகத் தோன்றவில்லையோ என்றவாறு. ப்ரபந்நாயிருப்பார்க்கு "மரணமானால் வைகுந்தங் கொடுக்கும் பிரான்" எனறபடி தேகங்கழிந்தவுடனே மோக்ஷ ஸித்தியுண்டு. அவர்கட்குத தேக சம்பந்தமே விரோதியாயிருக்கும். ஆதலால் அவர்கள் வாழ்நாள் கழிவதைக் கண்டு விரோதி கழிகிறதென்று மகிழ்வடைவார்கள் இக்கருத்தையுட் கொண்டே எம்பெருமானார் குன்றத்தூர் ஜீயரை நோக்கி அருளிச் செய்தார.

(9) ஒருருவிலே என்றது ஒருமுறை திருவாய்மொழிக்குப் பொருள் அருளிச் செய்கிற காலத்திலே என்றவாறு. காரணமானது கழிந்தபோது என்றது தேகம் நிலைத்திருப்பதற்குக் காரணமான காலங் கழிந்தபோது என்றவாறு. கார்யமும் தன்னடையே கழிந்த

கo-ம் பாட்டு—எண்பெருக்கந்நலத்து.

(10) இப்பாட்டால் திருமந்தரத்தை ஸார்த்தமாக அருளிச் செய்கிறார். ஆழ்வான் இப்பாட்டளவும் வரப்பணித்து இப்பாட்டள விலே வந்தவாறே 'இத்தையுந் தம் ஆசார்யர்கள் பக்கலிலே கேட்டுக் கொள்ளுங்கோள்' என்ன, பட்டரும், சீராமப்பிள்ளையுமெழுந்தி ருந்து போகப் புக்கவாறே அவர்களை அழைத்து 'இன்னபோதின் னிருப்பார், இன்னார் போவார் என்று தெரியாது; இருந்து கேளுங் கோள்' என்று திருமந்த்ரத்தை உபதேசித்து இப்பாட்டை நிர்வ கித்து 'இப்பாட்டை இதுக்கர்த்தமாக நினைத்திருங்கோள்' என்று பணித்தான். ப. அ.

(தொடரும்)

தன்றோ என்றது தேகமும் தன்னுடையே கழிந்தன்றோ என்றவாறு. ப்ராப்தியும் இனிக்கை புகுந்ததன்றோ என்றது பலப்ராப்தியும் இனி ஸித்தித்ததன்றோ என்றவாறு சிந்தா விஷயமுண்டோ என்றது சிந் தித்து வருந்துவதற்கு விஷயமுண்டோ என்றவாறு.

(10) ஆழ்வான்-கூரத்தாழ்வான். இப்பாட்டளவும் வரப் பணித்து என்றது இப்பாட்டுவரை அர்த்தமருளிச்செய்து என்ற வாறு. பட்டர், சீராமப்பிள்ளை என்ற இவ்விருவரும் கூரத்தாழ்வான திருக்குமாரர்கள். இப்பாட்டுத் திருமந்திரார்த்தமாக இருப்பதால், இதனை அவரவர் தமதமதாசார்ய ஸந்நிதியிலே கேட்டுத் தெளிய வேண்டியது முறையாதலால், அதனையுட்கொண்டு தம் குமாரரை நோக்கி, 'இதனை நம்மாசார்யரிடத்திற கேட்பீர்' என்று நியமித் தார். அந்த நியமனத்தை மேற்கொண்டு அவர்கள் எழுந்து செல் வதைக்கண்டு, 'சரீரம் நிலையற்றதாதலால் இவர்கள் தம்மாசார்ய ரிடத்தில் இவ்வர்த்தத்தைச் சென்று கேட்கும்வரை அவருமிருவருடன் கூடியிருப்பார் என்பது நிச்சயமில்லையே; ப்ரபந்நராயிருப்பார்க்குத் திருமந்திரத்தின் அர்த்தாநுஸந்தானம முக்யமாயிற்றே; இனி இவ் வர்த்தத்தை உபதேசிப்பாரில்லாவிட்டால் என் செய்வது' என்ற அருளுடையவராய் அப்பொழுதே அவர்களை அங்கிருத்திக்கொண்டு உபதேசித்தார்.

ஸ்ரீ:

ஸ்ரீவில்லிபுத்தூர், வடபெருங்கோயில் விஷயமான உண்மையுரை.

[ஸ்ரீவில்லிபுத்தூர், ஸ்ரீ உ. வே. வித்வான் ரே. அப்புவையங்கார் ஸ்வாமி எழுதுவது.]

ஸ்ரீய:பதியாய் சகல ஜகத்காரணனுயிருக்கிற ஸர்வேசுவரன் ஜகத் ஸம்ரக்ஷணார்த்தமாகத் திருக்கோயில்கொண்டெழுந்தருளி யிருக்கிற திவ்ய தேசங்கள் நூற்றெட்டினுள் ஒன்று ஸ்ரீவில்லிபுத்தூர் என்டது யாவரும் ஒப்பத்தக்கதே. புராதனமானதும், புராணப்பிரஸித்தயாயுள்ளதும், பெரியாழ்வார் ஸ்ரீ ஆண்டாள் பாடல் பெற்றதுமாகிய இந்த ஸ்ரீவில்லிபுத்தூரில் முக்கியமாயிருப்பதும், மண்டப கோபுர ப்ரகாராதிகளாலே அலங்கிருதயாயுள்ளதும் ஸ்ரீ வடபெருங்கோயிலேயாம். இது, முற்காலத்தில் வடவாலேச்சுவரனென்னும் சிவபெருமானது கோயிலாகவிருந்ததென்றும், அதனை ஸ்ரீ வைணவர்கள் பெருமாள் கோயிலாகமாற்றி ஏமாற்றிவிட்டார்களென்றும், மாற்றிவிட்டாலும் இன்னும் கீழ்த்தலத்திலே சிவலிங்கமிருக்கிறதென்றும், ஆனால் அதை ஒருவரும்போய்ப் பார்க்கவொண்ணாதபடி வாசல்களிற்சுவர்வைத்துத்தடுத்திருக்கின்றதுமன்றி அச்சுவர்களைப் பேதித்துக்கொண்டுள்ளே ஒருவரும் போகமுடியாதபடி. மஹாமண்டபவாசலில் முன்பு ஸ்ரீ நரசிம்மமூர்த்தியைப் பிரதிஷ்டை செய்து வைத்திருக்கிறார்களென்றும் சிலர் உண்மையுணராது அபவாதங்கூறி அபசாரப்படுகின்றனர்.

அவர்கள் உண்மையுணர்ந்து அபசாரப்படாதபடி அநேக ஹேதுக்களை யெடுத்துக்கூறி யுண்மையை உணர்த்துவாம்:—

இப்பெருமாள்கோயில் சிவன்கோயிலாக முன்னிருந்தால் இவ்வூரில் வேறெங்கே பெருமாள் கோயிலிருந்தது? இவ்வூரில், இதைத் தவிர புராதனமான வேறு பெருமாள் கோயிலிருந்ததாக ஒருவருங் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை. பெருமாள் கோயிலில்லாத

இவ்வூர் நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்றாகத் தொன்றுதொட்டு வழங்கப்படுமோ? பேரறிஞர்களே! காய்தல் உவத்தல் அகற்றி இவ்விடயத்தை நன்கு ஆராய்க.

சிற்பசாஸ்திரம், ஆகமசாஸ்திரம் முதலிய சாஸ்திரங்களொன்றிலும் சிறிதும் பரிசயமில்லாதவரும் கோயிலின் அமைப்பை உற்று நோக்குவாராயின் இக்கோயிலைச் சிவன் கோயிலாக முன்னிருந்ததென்று கூறத்துணியவே துணியார்.

இவ்வாலயம் சிவாலயமாக விருந்தால் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்வதற்குத் தகுதியாக ஆகம சாஸ்திரவிதிப்படிச் சிறியதோர் சதுரங்கண அளவினதாய்க் கர்ப்பக்கிரக மமைக்கப்பட்டிருக்குமன்றே! இக்கோயிலின் கர்ப்பக்கிரகமோ பாஞ்சராத்திராகமப்படி பெரிய நாலங்கண வளவினதாய் ஆதியஞ்சோதியாகிய மணிவண்ணப் பெருமாள் *அநந்த பரியங்கத்தில் †அறிதுயிலமர்ந்தருளுவதற்குத் தகுதியாகவே அமைக்கப்பட்டிருக்கிறதென்பதை யாவருங் காணலாம். மற்றைய அர்த்தமண்டபம் முதலியவைகளிலும் இக்கோயில சிவாலயமாக முன்னிருந்திருக்கலாமென ஊகிப்பதற்கேதுவாக ஓரடையாளமாவது காணப்படவில்லை இங்ஙனமிருந்தும் இன்னமும் இக்கோயிலுள்ளே சிவலிங்கமிருப்பதாக வாய்கூசாமற் பேசுகின்றனர் இது விந்தையிலும் விந்தை!

மற்றொருவர் கோயிலைத் தங்கோயிலாக மாற்றி அபகரித்துக் கொண்டவர்கள் தங்களவு வெளிப்படுதற்கு முக்கியகாரணமாயிருக்கிற சின்னத்தைச் சினனஞ்செய்யாது உள்ளே வைத்திருப்பார்களா? ஒரு மூடரும் வைத்திரார். உள்ளே புகுந்து ஒருவரும் பார்க்கமுடியாதபடி வாயில்கடோறும் நன்றாகச் சுவர்வைத்து மறைத்து முன்வாசலில் நரசிமமூர்த்தியைப் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள் என்ற அபிமானிகள் உள்ளே சிவலிங்கமிருக்கிறதென்று எப்படித் தெரிந்துகொண்டார்கள்? நேரிற்கண்டோ? நேராகக்கண்டவர் பாற் கேட்டோ? அவர்கள் சொல்லுகிற வார்த்தைகளாலேயே கண்டவர்களே கிடையாதென்றேற்படுகிறபோது கேட்டவர்களும் கிடையா

---

*அநந்தபரியங்கம்——ஆதிசேஷனாகிய அணை.

†அறிதுயில்—யோகநித்திரை.

தென்பதற்கு என்னதடை? ஒருவேளை அவர்கள் இஷ்டப்படி மாற்றப்பட்டிருந்தாலு மிருக்கலாமென்று வைத்துக்கொண்டாலுங்கூட மாற்றப்பட்ட காலம் இன்னதாயிருக்கலாமென்று சந்தேகிப்பதற்குச் சிறிதுமாதாரம் ஏற்படவில்லை.

பிரகிருக சந்நிதியின் மகாமண்டபத்தின் தென்புறமிருக்கிற திருமதிலின் தென்கீழ்ப்புறத்தின் அடிவாரத்துள்ள பட்டிகை கற்களிலும் மேற்குறித்த சந்நிதியின் மேற்றளத்திலுள்ள கர்ப்பகிருகத்தின் திருவாசல் வடபுறமிருக்கிற நிலைக்கல்லிலும், ஆயிரவருடங்களுக்கு முன்புள்ள காலங்களில் வழங்கிவந்ததாகப் பெரியோர்களால் ஒப்புக்கொள்ளப்படுகிற தமிழ் வட்டெழுத்துக்களால் வெட்டப்பட்டிருக்கிற சாசனங்களாலே ஆயிரத்தைந்நூறு வருடங்களுக்கு முன்பே இந்தக் கோயில் பெருமாள் கோயிலாகவே இருந்ததாகத் தெரிகிறது.

கலிபிறந்த வருடத்திற்கு நாற்பத்தேழாவது வருஷமான குரோதன வருஷத்தில் திருவவதரித்தருளிய பெரியாழ்வாராலும் கலி தொண்ணூற்றெட்டாவதான நளவருஷத்தில் திருவவதரித்தருளிய ஸ்ரீ ஆண்டாளாலும் பாடப்பட்டிருத்தலாலே சுமார் ஐயாயிர வருடங்களுக்கு முன்பும் பெருமாள்கோயிலாகவே இருந்ததென்றேற்படுகிறது. ஆகையாலே இந்தக் கலியுகத்திலும் மாற்றப்படவில்லை. பெரியாழ்வார், ஸ்ரீ ஆண்டாள் இவர்களது திவ்ய சரித்திரங்களை எதிர்காலத்தில் நடக்கப் போகிறதாகச் சொல்லப்பட்ட வராக க்ஷேத்திர மாகாத்மியத்தைச்சேர்ந்த ஸ்ரீவராகபுராணமானது துவாபரயுகாந்தத்தில் அவதரித்தருளிய வேதவியாச பகவானாலே அந்த யுகத்திலேயே அருளிச்செய்ததாக விளங்குகிறதினாலே துவாபர யுகத்திலும் மாற்றப்படவில்லை.

இப்போது வழங்கிவருகிற ஸ்ரீவராககற்பத்திற்கு முன்புள்ள அநேக கற்பங்களுக்கு முந்தியிருந்ததாகச் சொல்லப்படுகிற இரதந்தர கற்பக் கதையாகிய பிரமகைவர்த்த புராணத்தில் அநேக இடங்களில் இந்தக்கோயிலை விஷ்ணுவின் திருப்பதியென்று சொல்லியிருத்தலாலே இந்த ஸ்ரீவராககற்பத்திலும் மாற்றப்படவில்லை. அதற்கு முந்தின சில கற்பங்களிலும் மாற்றப்படவில்லை.

இந்த க்ஷேத்திரத்திலுள்ள புராதனமான இந்த ஸந்நிதியில் முதன்முதலில் பிர்ம்மா முதலிய தேவர்களாலேயும், பின்பு பிருகு மார்க்கண்டேயர் முதலிய முனிவர்களாலேயும் வடமகாதாமாவென் கிற பெரியபெருமாள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறாரென்பது புராணப் பிரசித்தம். ஆகையாலே இந்த ஸந்நிதி புராதனமான பெருமாள் ஸந்நிதியேயன்றிப் புதிதாக வொருகாலத்திலும் மாற்றப்படவில்லையென்பது வெள்ளிடை வெற்பாம்.

ஆயின் கீழே புராதனமாய்ச் சிறிதுஞ் சேதப்படாமல் அழகியதாயிருந்துள்ள ஸந்நிதியை மூடிவைத்துவிட்டு மேலே புதிதாய் ஒரு கோயிலையமைத்துப் பெரிய பெருமாளைப் பிரதிஷ்டை செய்யப் பட்டிருக்கிறதற்குக் காரணமென்னையோவென்னில்சொல்லுதும்:—

அநேக யுகங்களுக்கு முன்பு பிர்மா முதலியவர்களாலே பிரதிஷ்டை செய்யப்பட்ட எம்பெருமானுடைய அருமைத் திருமேனி காலக்கிரமத்தினாலும், நீரூற்றின் மிகுதியாலும் சிறிது சிறிதாகச் சிதலமடைந்துகொண்டு வருகிறபடியைச்சேவித்தும், சிரணபிம்பங் களைச் சேவித்தல் ஆகம விருத்தமென்பதை யறிந்தும், அந்த ஸந்நிதியை மறைத்துவிட்டுக் கீழேயுள்ளபடியே மேற்றலமமைத்துப் பிரதிஷ்டை செய்வதே சரியான கைங்கர்யமென்றுந் திருவுள்ளம் பற்றி மேலே கோயில் கட்டுவதற்குக் கீழே தகுந்த அஸ்திவார பலமிருக்கவேண்டுமென்பதற்காக அர்த்தமண்டபம் முதலிய மண்டபங் களிலே ஊடே ஊடே சுவர்வைத்துத்தடுத்து அவற்றின் இடையிலே சில பாகங்களில் மண்களைக் கொட்டியும் பலப்படுத்திக்கொண்டு மேலே கோயில்கட்டி மகான்களாகிய அறிஞர்கள் பெருமாளைப் பிரதிஷ்டை செய்திருக்கிறார்களென்பதே உண்மையுரையாம்.

இந்தக்கோயிலின் கீழ்ப்புறமெல்லாம் மிகுதியும நீரூற்றாகவேயிருந்ததென்பது இப்போது பார்ப்பவர்க்கும் நன்குவிளங்கும். கர்ண பரம்பரையாய் வழங்கி வருகிற இந்த ஐதிஹ்யத்தைக் கேட்டிராதவர் மிகச்சிலரேயாவர். மேலே முதலாவதாக எடுத்துக் காட்டிய வட்டெழுத்துச் சிலாசாசனத்தில் பெரியபெருமாளுக்கு ஜலசயநப்பெருமாளாகிய பள்ளிகொண்டருளிய பரமசுவாமி என்று

திருநாமமிட்டு சொல்லப்பட்டிருப்பதும் இங்கு நீரூற்று மிகுதியாயிருந்த தென்பதை வலியுறுத்தும்.

இது நிற்க; இந்த ஸந்நிதி பெருமாள் ஸந்நிதியாகவே எக்காலத்திலுமிருந்ததென்பதற்குச் சாசனரூபமாயிருக்கிற முக்கியமாகிய ஆதாரங்களையும் எடுத்துக்காட்டுவோம். இந்த ஸந்நிதிக்குத் தென்மேற்கு மூலையிலிருக்கிற மடவார்வளாகமென்னும் சிவக்ஷேத்திரம் பிரம்ம கைவர்த்தமென்னும புராணத்தில் உபரிபாகத்தில் சிவவைபவ கண்டத்தில் சொல்லப்பட்டிருக்கிற சமீவனநாதநீச்சுரமாகாத்மியத்தில் ௬௬-வது அத்தியாயத்தில்,

𑌕𑍃𑌤𑌯𑍁𑌗𑍇 𑌮𑌹𑌾𑌪𑍁𑌣𑍍𑌯𑍇 𑌶𑌮𑍀𑌵𑌨 𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍।
𑌤𑍍𑌰𑍇𑌤𑌾𑌯𑍁𑌗𑍇 𑌮𑌹𑌾𑌪𑍁𑌣𑍍𑌯𑍇 𑌅𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌮 𑌇𑌤𑍍𑌯𑌭𑍂𑌤𑍍॥
𑌦𑍍𑌵𑌾𑌪𑌰𑍇 𑌤𑍁 𑌮𑌹𑌾𑌪𑍁𑌣𑍍𑌯𑍇 𑌦𑍂𑌰𑍍𑌵𑌾𑌸𑌾𑌶𑍍𑌰𑌮 𑌏𑌵𑌚।
𑌕𑌲𑍌𑌯𑍁𑌗𑍇 𑌮𑌹𑌾𑌪𑍁𑌣𑍍𑌯𑍇 𑌵𑍃𑌦𑍍𑌧 𑌨𑌾𑌥𑌾𑌖𑍍𑌯 𑌮𑌿𑌤𑍍𑌯𑌭𑍂𑌤𑍍॥

க்ருதயுகே மஹாபுண்யே சமீவந முத்தமம்-
த்ரேதாயுகே மஹாபுண்யே அகஸ்த்யாச்ரம இத்யபூத். (25)
த்வாபரே து மஹாபுண்யே தூர்வாஸாச்ரம யேவச
கலௌயுகே மஹாபுண்யே வ்ருத்த நாதாக்ய மித்யபூத். (26)

என்று சொல்லியிருக்கிறதினாலே, அதாவது கிருதயுகத்தில் சமீவனமென்றும், திரேதாயுகத்தில் அகத்தீச்சுரமென்றும், துவாபரயுகத்தில் தூர்வாசாச்சிரமமென்றும், கலியுகத்தில் விருத்தநாதேச்சுரமென்றும் பெயர்பெற்று விளங்குவதாகத் தெரிகிறது. சமீவன மகிமையை வகுத்துரைக்கின்ற அறுபதாவது அத்தியாயத்தில்,

𑌶𑍍𑌰𑌵𑌣𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌜𑌨𑍍𑌤𑍂𑌨𑌾𑌂 𑌮𑌹𑌾𑌪𑌾𑌪 𑌨𑌿𑌵𑌾𑌰𑌣𑌂।
𑌕𑌲𑌿𑌧𑍍𑌵𑌂𑌸𑌕𑌰𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌂 𑌤𑌾𑌪𑌤𑍍𑌰𑌯 𑌨𑌿𑌵𑌾𑌰𑌣𑌂॥
𑌤𑌚𑍍𑌛𑌮𑍀𑌵𑌨𑌜𑌂 𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 𑌪𑍁𑌷𑍍𑌟𑌂 𑌸𑌂𑌵𑌨𑌤𑍍𑌰𑌯𑍇।
𑌪𑌾𑌟𑌲𑍍𑌯 𑌶𑌯𑌨𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌕𑍍𑌰𑍋𑌶𑌮𑌾𑌤𑍍𑌰𑌕𑍈𑌃
𑌷𑌷𑍍𑌟𑍀𑌣𑌾𑌂𑌶𑍍𑌰𑍁𑌤𑌿 𑌚𑌤𑌸𑌾𑌂 𑌤𑌪𑍋𑌵𑌨 𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍।

ச்ரவணாத ஸர்வஜந்தூநாம் மஹாபாப நிவாரணம்
கலித்வம்ஸகரம் புண்யம் தாபத்ரய நிவாரணம

தச்சமீவநமித்யேவம் ப்ரஸித்தம் புவநத்ரயே
வடாக்யசயநஸ்யாஸ்ய தக்ஷிணேக்ரோச மத்யமே
ருஷீணாமுக்ர தபஸாம் ஆவாஸஸ்தாந முத்தமம்

அகத்தீச்சுரத்தின் பெருமையைச் சொல்லுகிற அந்த அத்யாயத்திலேயே,

ശ്വേതാരണ്യേ മഹാക്ഷേത്രേ തച്ഛമീവനമുത്തമം।
വടാഖ്യശയനസ്ഥാനാത് സ്ഥാനമത്യന്തപാവനം॥
തസ്യ ദക്ഷിണദിഗ്ഭാഗേ ക്രോശാർദ്ധസ്യ മിതാന്തരേ।
അഗസ്തീശ്വരനാമ്നൈവ പൂർവ്വാഭിമുഖതോ ഹരഃ॥
ச்வேதாரண்யே மஹாக்ஷேத்ரே தச்சமீவநமுத்தமம்
வடாக்யசயநஸ்தாநாத்ஸ்தாநமத்யந்தபாவநம்
தஸ்ய தக்ஷிணதிக்பாகேக் ரோசார்த்தஸ்ய மிதாந்தரே
அகஸ்தீச்வரநாம்நைவ பூர்வாபிமுகதோ ஹர:

என்றும், தூர்வாசாச்ரமத்தின் தூய்மையை விளக்குகிற அறுபத்திரண்டாவது அத்தியாயத்தில்,

ഹാലാസ്യനൈരൃതേ ഭാഗേ യോജനാചതുരന്തരേ।
വടാഖ്യശയനസ്യാസ്യ ദക്ഷിണേ ക്രോശമധ്യമേ॥
തച്ഛമീവനമിത്യേവം പ്രസിദ്ധം ഭുവനത്രയേ।
തന്മധ്യേസ്യ മഹാലിംഗം വൈദ്യനാഥ ഉദാഹൃതം॥
ஹாலாஸ்ய நைருதிக்பாகே யோஜநா சதுராந்தரே
வடாக்ய சயநஸ்யாஸ்ய தக்ஷிணே க்ரோசமத்யமே
தச்சமீவநமித்யேவம் ப்ரஸித்தம் புவநத்ரயே
தந்மத்யேஸ்ய மஹாலிங்கம் வைத்யநாத முதாஹ்ருதம்.

என்றும் விருத்தேச்சுர மாகாத்மியத்தை விளக்குகிற அறுபத்து நாலாவது அத்தியாயத்தில்,

അസ്തി വേഗവതീതീരേ ദക്ഷിണേ പരിപാവനേ।
ശ്രീകദംബവനസ്യാസ്യ നൈരൃതേ പുണ്യഭൂതലേ॥
அஸ்தி வேகவதீதீரே தக்ஷிணே பரிபாவநே
ஸ்ரீகதம்பவநஸ்யாஸ்ய நைருதே புண்யபூதலே

𑌯𑍋𑌜𑌨𑍈𑌶𑍍𑌚 𑌚𑌤𑍁𑌰𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑍇 𑌪𑍁𑌣𑍍𑌯𑍇 𑌪𑌰𑌮𑌪𑌾𑌵𑌨𑍇।
𑌵𑌟𑌾𑌖𑍍𑌯𑌶𑌯𑌨𑍇 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌕𑍍𑌰𑍋𑌶𑌮𑌧𑍍𑌯𑌮𑍇॥
𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌮𑌹𑌾𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑍇𑌶 𑌤𑍀𑌰𑍍𑌥𑌂 𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌪𑍂𑌰𑍍𑌵𑌤𑌃।
𑌤𑌤𑍍𑌰𑌾𑌸𑍍𑌯 𑌦𑌿𑌵𑍍𑌯𑌤𑍀𑌰𑍍𑌥𑌞𑍍𑌚 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌤𑍀𑌰𑍍𑌥𑌂 𑌸𑌮𑌾𑌹𑍍𑌵𑌯𑌮𑍍॥

யோஜனைச்ச சதுர்த்தாந்தே புண்யே பரமபாவநே
வடாக்யசயநே விஷ்ணோ: தக்ஷிணே க்ரோச மத்யகே
ஸ்தாநே மஹாதகஸ்த்யேச தீர்த்தம் தேவஸ்ய பூர்வத:
தத்ராஸ்ய திவ்யதீர்த்தஞ்ச ப்ரஹ்மதீர்த்த ஸமாஹ்வயம்.

என்றும் அறுபத்தாறுவது அத்யாயத்தில் பரமசிவன நாரதமாமுனிவரைக்குறித்து ஆகாயவாணியாகச் சொல்லுமிடத்தில்,

𑌤𑌦𑌾𑌽𑌮𑍍𑌬𑌰𑌾𑌚𑍍𑌚 𑌸𑌮𑍍𑌭𑍂𑌤𑌾 𑌵𑌾𑌗𑍁𑌵𑌾𑌚𑌾𑌶𑌰𑍀𑌰𑌿𑌣𑍀।
𑌭𑍋 𑌭𑍋𑌽𑌗𑌸𑍍𑌤𑍍𑌯 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗 𑌶𑍃𑌣𑍁𑌷𑍍𑌵 𑌵𑌚𑌨𑌂 𑌪𑌰𑌮𑍍॥

𑌯𑌦𑌾 𑌤𑍇 𑌜𑌨𑍍𑌮𑌸𑌂𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌭𑌾𑌰𑌤𑍇 𑌚 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿।
𑌤𑌦𑍍𑌦𑍇𑌶𑌂 𑌤𑌵 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌤𑌮𑌂 𑌮𑌹𑌤𑍍॥

𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌵𑍇𑌗𑌵𑌤𑍀𑌤𑍀𑌰𑍇 𑌹𑌾𑌲𑌾𑌸𑍍𑌯𑍇 𑌚 𑌮𑌹𑌾𑌸𑍍𑌥𑌲𑍇।
𑌤𑌸𑍍𑌯 𑌨𑍈𑌰𑍃𑌤𑌿 𑌦𑌿𑌗𑍍𑌭𑌾𑌗𑍇 𑌯𑍋𑌜𑌨𑌾𑌨𑌾𑌂 𑌚𑌤𑍁𑌰𑌨𑍍𑌤𑌰𑍇॥

𑌵𑌟𑌾𑌖𑍍𑌯𑌶𑌯𑌨𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑌰𑌮𑌪𑌾𑌵𑌨𑍇।
𑌤𑌸𑍍𑌯 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌦𑌿𑌗𑍍𑌭𑌾𑌗𑍇 𑌕𑍍𑌰𑍋𑌶𑌮𑌾𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌮𑌧𑍍𑌯𑌮𑍇॥

𑌵𑍃𑌨𑍍𑌦𑌾𑌰𑌣𑍍𑌯𑍇 𑌸𑌰𑍋𑌰𑌮𑍍𑌯𑍇 𑌵𑍃𑌕𑍍𑌷𑌷𑌣𑍍𑌡𑍇 𑌸𑌾𑌵𑌨𑌾𑌶𑍍𑌰𑌯𑍇।
𑌤𑌪𑌸𑍍𑌵𑌿𑌜𑌨𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 𑌶𑌿𑌷𑍍𑌯𑍈𑌃 𑌸𑌹𑌰𑍍𑌷𑌿𑌭𑌿𑌃 𑌸𑌦𑌾॥
𑌪𑍂𑌜𑌿𑌤𑌂 𑌦𑌿𑌵𑍍𑌯𑌲𑌿𑌙𑍍𑌗𑌞𑍍𑌚 𑌸𑌂𑌪𑍂𑌜𑌿𑌕𑌾 𑌸𑌦𑌾𑌶𑌿𑌵𑌂।

ததாம்பராச்ச ஸம்பூதா வாகுவாசா சரீரிணி
போ போகஸ்த்ய மஹாபாக ச்ருணுஷ்வ வசநம்பரம்.
யதாதே ஜந்ம ஸம்சுத்திர் பாரதேச பவிஷ்யதி
தத்தேசம் தவவக்ஷ்யாமி ஸ்தாநம் புண்யதமம்மஹத்.
ஸ்ரீமத் வேகவதிதீரே ஹாலாஸ்யேச மஹாஸ்தலே
தஸ்ய நைருதி திக்பாகே யோஜநாஞ் சதுரந்தரே.

வடாக்ய சயந ஸ்தாநே விஷ்ணோ: பரமபாவநே
தஸ்ய தக்ஷிண திக்பாகே க்ரோசார்த்தஸ்ய நிபாதநே.

வ்ருத்தநாத புரேசச்ச ப்ரஸித்தம் புவநத்ரயே
தச்சமீவநமித்யஸ்ய ருஷ்யபி: பஹுபி: புரா.

பூஜிதம் திவ்யலிங்கஞ்ச ஸம்ஸித்திகர ஸத்தமம்.

என்றுஞ் சொல்லுகிற இந்த முக்யமான பிரமாணங்களிலே வேகவதி என்னும்பெயரையுடைய வைகைநதியின் தென்கரையிலிருக்கிறதும் கதம்பவனமென்றும், ஹாலாஸ்யமென்றும் பெயர்பெற்று விளங்குகின்றதுமான மதுராநகரத்திற்கு நிருதி மூலையிலே நாலுயோஜனை தூரத்துக்குள்ளேயிருக்கிற பரமபாவநமான வடபத்திர சயனமென்னும்திருநாமத்தையுடையமஹாவிஷ்ணுவின் சயனஸ்தானமான பெரியஸந்நிதிக்கு நிருதிதிக்கில் அரைக்குரோச தூரத்திலிருக்கிற சமீவநக்ஷேத்திரமென்றும,அகத்தீச்வரக்ஷேத்திரமென்றும், தூர்வாசாச்ரமமென்றும், வ்ருத்தநாதேச்சுவரமென்றும், சொல்லப்படுகிற மடவார்வளாகமென்னும் சிவக்ஷேத்திரத்துக்கு மகரிஷிகளாலேயும், பரமசிவனாலேயும் மணிவண்ணன் துயிலமர்ந்தருளுகிற வடபெருங்கோயிலையே காட்டப்பட்டிருத்தலை அப்புராணவாயிலாக அறிந்துணர்ந்தவர்கள் ஒருபோதும் இவ்விஷயத்தில் சந்தேகங்கொள்ளாரென நம்புகிறோம், அபிமானிகளும் முன் கொண்டிருந்த அபிப்பிராயத்தை முற்றிலும் ஒழித்து உண்மையை உள்ளவாறுணர்ந்து உள்ளந்தேறுவார்களெனறுதேறி இது விஷயமாக வேறொன்றையும் இன்னுமெடுத்துக்கூறாமல் இம்மட்டோடு நிறுத்திவிட்டனம்.

ஸ்ரீ:

உபநிடதக்கதை.

உபநிடதங்களில் அறிந்துகொள்ளத் தக்க பலவரிய கதைகள் குறிப்பிடப்பெற்றுள்ளன. அவற்றுள் கேநோபநிடதத்தில் எடுத்துக் காட்டப்பெற்றகதை இங்கெழுதப்பெறுகிறது. அது வருமாறு:—

இந்த உபநிடதத்தில் வைராக்யமுடைய ஒருவனுக்குப் பிரம்மஜ்ஞாநமுண்டாவதற்கு ஏதுவானகதை, குருசிஷ்யர்கட்கு நிகழ்ந்த வினு விடை வாயிலாகவுரைக்கப் பெற்றுளது.

சிஷ்யன்:-(குருவை நோக்கி) மனம் யாரால் ஏவப்பட்டு இஷ்டமான பொருளை விரும்புகிறது? பிராணவாயு யாருடன் கூடி தன் வியாபாரத்தைச் செய்கிறது? உலகினர் யாரால் ஏவப்பட்டு வார்த்தை பேசுகிறார்கள்? ஐம்புலன்கள் எவரால் தத்தம் தொழில்களைச் செய்கின்றன?

குரு:— சப்தத்தையறிதற்குச் சிரோத்திரேந்திரியத்தைக் கேட்குமாறும், மனனேந்திரியத்தை மனனஞ் செய்யும்படியும், பிராணவாயுவைச் சஞ்சரிக்குமாறும், வாக்கைப் பேசும்படியும் செய்பவன் பரமாத்மா. இவனை இவ்வாறு செய்கின்றானென்று எவர்களறிகின்றார்களோ அவர்கள் இந்தப் பூமியை விட்டு மறுபிறப்பில்லாத பரமபதத்தை யடைவார்கள். பரமாத்மா மனம் வாக்குக் காயங்கட்கெட்டாதவனாய் யாண்டும் நிறைந்து விளங்குகின்றான். இத்தகைய பரப்பிரம்மத்தை நீ அறிந்து விட்டதாக நினைப்பையானால் அது மிகவும் புல்லியது.

சிஷ்:—தேவரீர் உபதேசிப்பதற்கு முன் பிரம்மவஸ்து என்னாலறியப்படவில்லை. இப்பொழுது என்னால் அந்தப் பிரம்மவஸ்து அறியப்பட்டதென்றே நினைக்கிறேன்.

குரு:— அப்பா! நீ இவ்வாறு நினைப்பது முறையில்லை.

சிஷ்:—ஸ்வாமி! உம்மால் உபதேசிக்கப்பெற்ற ஞானத்தினால் அஜ்ஞானம் நீங்கப்பெறவே உண்மை யறிவுண்டாயிற்று. அதனால் அறிந்தேனென்பது முறையன்றோ!

குரு:— எவன் அறியவில்லையென்று கருதுகிறானோ அவனுக்கு அந்தப் பிர்ம்மவஸ்து அறியப்பட்டதாகிறது. எவன் அறிந்ததாகக் கருதுகிறானோ அவனால் பிர்ம்மவஸ்து அறியப்பட்டதாகவில்லை. * "𑌯𑌸𑍍𑌯𑌾𑌮𑌤𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌮𑌤𑌂 𑌮𑌤𑌂 𑌯𑌸𑍍𑌯 𑌨 𑌵𑍇𑌦 𑌸𑌃, 𑌅𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌂 𑌵𑌿𑌜𑌾𑌨𑌤𑌾𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌮𑌵𑌿𑌜𑌾𑌨𑌤𑌾𑌂" "யஸ்யாமதம் தஸ்யமதம் மதம்யஸ்ய நவேதஸ:, அவிஜ்ஞாதம் விஜாநதாம் விக்ஞாநதமவிஜாநதாம்" என்ற பிரமாணத்தாலுமறிவாயாக. இனனும் எவர்கள் பிர்ம்மஸ்வரூபத்தை இவ்வாறறிகிறார்களோ அவர்கள் மறுஜன்மத்தை யடையவில்லை. இந்த ஜன்மத்தில் பிர்ம்மஜ்ஞானமில்லாதொழிவார்களானால் அவர்கட்கு ஆத்ம விநாச முண்டாகிறது ஆதலால் அறிவுடையவர்கள் எங்கும் நிறைந்து விளங்குகின்ற பரமாத்மாவை ஒப்புயர்வற்றவனென்று தியானஞ்செய்து, இந்த லோகத்தினின்றும் விடுபட்டு, அர்ச்சராதி மார்க்கமாய்ச் சென்று பரமபத மடைகிறார்கள்.

சிஷ்:—ஸ்வாமீ! இப்பொழுது தேவரீர் உபதேசித்தருளிய இவ்விஷயம் என்னெஞ்சிற் பதியும்படி இன்னும் தெளிவாக எடுத்துரைக்க வேண்டும்.

குரு:— அப்பா! நானிதுவரையும் உபதேசித்து வந்த விஷயம் உன்னெஞ்சிற்படும்படி ஒரு கதை எடுத்துரைக்கின்றேன்.

---

*(இதன்பொருள்) யஸ்ய-எவனுக்கு, (பிரம்மஸ்வரூபமானது) அமதம்-தெரியவில்லையென்கிற கருத்தோ, தஸ்ய-அவனுக்கு, மதம்-பிர்மம் தெரிந்தது (அவனாலறியப்பட்டது) யஸ்ய-எவனுக்கு, (பிர்ம்மவஸ்துவானது) மதம்-அறியப்பட்டதென்கிற கருத்தோ, ஸ:-அவன், ப்ரஹ்ம-பிர்ம்மஸ்வரூபததை, நவேத-அறியவில்லை, (ஏனென்றால்) ப்ரஹ்ம-பிர்ம்மஸ்வரூபமானது, விஜாநதாம்-அறிந்தவர்களுக்கு, அவிஜ்ஞாதம்-அறியப்படாது, அவிஜாநாதாம்-அறியப்படாதென்கிறஞானமானது எவர்களுக்கிருக்கிறதோ, (அவர்களால்) விஜ்ஞாதம்-செவவையாக அறியப்பட்டதாகிறது.

சிஷ்:— ஸ்வாமீ! அப்படியே எடுத்துரைக்க வேண்டும். மிகவும் சிரத்தையோடு கருத்தூன்றிக் கேட்கிறேன்.

குரு:— முன்னொரு காலத்தில் அசுரர்கள் மிகுந்த வலிமையுடையவர்களாய்த் தேவர்களோடெதிர்த்துப் போர்செய்து தன் புறத்தினார்கள். அப்பொழுது பரமாத்மா தேவர்களின் க்ஷேமத்திற்காக அசுரர்களோடெதிர்த்து வெற்றி கொண்டான். அது சமயம் தேவர்கள் இந்த ஜயம் பரமாத்மாவினாலுண்டாயிற்றென்றறியாமல் 'இது நமது சகாயத்தாலுண்டாயிற்று' என்று அஹங்காரங்கொண்டார்கள். பரமாத்மா 'இத் தேவர்கள் அறிவின்மையாலன்றோ இங்ஙனம் கருதுகிறார்கள்; இவர்களுடைய அஹங்காரத்தை அகற்றி விட வேண்டும்' என்று கருதி அவ்விடத்தில் ஓர் யக்ஷரூபியாய்த் தோன்றினான். தேவர்கள் அந்த யக்ஷரூபம் பரமாத்மாவின் ஸ்வரூபமென்றறியாமல், அவர்கள் எல்லாவற்றையும் தகிக்கும்படி செய்யும் சாமர்த்தியமுடைய அக்கினி தேவனை நோக்கி 'இதோ நமது முன்னிலையில் தோன்றுகிற யக்ஷம் இன்னதென்றறிந்து எங்கட்கறிவிப்பீர்' என்றனர். அக்கினி தேவன் 'அப்படியே செய்கிறேன்'என்று அந்த யக்ஷஸ்வரூபத்தைத் தாக்குவதற்கு ஓடினான் அப்பொழுது பரமாத்மா 'நீ யார்' என்று வினவினார் அதற்கு, அக்கினி தேவன் 'யான் ஜாதவேதனென்றும், அக்கினியென்றும்வழங்கப்படுவேன்' என்று விடையளித்தான்.

யக்ஷ:—உன்னிடத்திலுள்ள சாமர்த்தியம் இன்னதென்பதைத் தெரிவிப்பாய்.

அக்:— பூமியிலுள்ள எல்லாப்பொருள்களையும் சாம்பலாகச் செய்யும் சாமர்த்தியம் என்னிடத்திலுள்ளது.

யக்ஷ:—நீ கூறியபடி உன்னிடத்தில் அத்தகைய வலிமையிருக்குமானால் இதோ உன் முன்னிலையில் ஓர் துரும்பைப் போடுகின்றேன்; அதை நீ தகித்து விடுவையேல் உன்னை மிகவும் சாமர்த்யவானாகக் கருதுவேன்' என்று துரும்பைப் போட்டான்.

அக்:—'அப்படியே செய்கிறேன்' என்று அந்தத் துரும்பைச் சாடித் தன்னுலியன்றவரை தகிப்பதற்கு முயன்முன். முயன்றும் தகிக்கமுடியாதொழிய 'இஃதென்னே கொல்! என்று ஆச்சர்யமுற்று, நாணத்துடன் தேவர்கள்பாற் சென்று போமின்! அந்தப் பூதத்தின் பெருமையை உமக்கென்னென்றெடுத்துரைப்பேன்; அந்தப் பூதத்தினுலிடப்பெற்றத் துரும்பைஎன்னுல்தகிக்கும்படி செய்தற்கியலவில்லை என்று வருத்தத்துடன் சொன்னுன்.

தேவ:—'அக்கினிதேவனே! நீர் மிகவும் சக்தியுடையவரென்றுமதித் தன்றோஉம்மிடத்தில் அந்தப்பூதத்தினியல்பைஅறிந்துவரும் படிசொன்னோம்; உமதுகெதிஇவ்வாருயிற்றே! என்று ஆலோசித்து வாயுபகவானை நோக்கி இந்தப் பூகத்தினியல்பை ஆராய்ந்துரைப்பீர்' என்று வேண்டினுர்கள்.

வாயு:—'அப்படியே செய்கிறேன்' என்று அந்தப் பூதத்தைத் தாக்குவதற்கு ஓடினுன்.

யக்ஷ:—(வாயுவை நோக்கி) நீ யார்?

வாயு:—நான் பிரசித்த வாயுவென்று வழங்கப்படுவேன்; ஆகாயத்திற் சஞ்சரிக்கும் இயல்பும் எனக்குண்டு.

யக்ஷ:—உன்னிடத்தில் யாது சக்தியுளது?

வாயு:—பூமியிலுள்ள ஸ்காவர முதலிய எல்லாப் பொருள்களேயும் கிரகிக்கும் தன்மை எனக்குண்டு.

யக்ஷ:—அவ்வளவு சாமர்த்தியம் உனக்கிருக்குமானுல் 'இதோ உன் முன்னிலேயிலிருக்கிற இந்தப் புல்லேக் கிரகிப்பாய்'.

வாயு:—'அப்படியே செய்கிறேன்' என்று அந்தப்புல்லேத் தாக்குவதற்கு விரைவுடன் சென்று ஆந்தனையும் பார்த்து அதைக் கிரகிப்பதற்கியலாதொழிய தனக்குள் சிந்திக்கத் தொடங்கினுன். ஈதென்ன வியப்பு! இதுவரையும் இததகைய செயலேக் கண்டதுமிலலே; கேட்டதுமில்லேயே; இனி யென் செய்

வது' என்று தேவர்கள்பாற்சென்று 'அந்தப்பூதத்தினியல்பை என்னாலறிவதற்குச் சக்தியில்லை' யென்று வருத்தத்துடன் கூறினன்.

தேவ:—வாயுதேவனே! அக்கினிதேவன் சக்தியற்றவனாகிவிடவே உம்மையனுப்பினோம். உமது கெதியும் இங்ஙனமாயிற்றே! இனி யென்செய்வதென்று இந்திரனை நோக்கித் தேவதேவா! இனி, நீரே இந்தப்பூதத்தினியல்பைத் தெரிந்துணர்ந்துவதற்கு வலிமையுடையவராவீர்.

இந்:— 'அவ்வாறே செய்கிறேன்' என்று அந்தப் பூதத்தைத் தாக்குவதற்கு விரைந்து சென்றான். யக்ஷரூபியாகிய பரமாத்மா, இவன் தேவர்கட்கு அரசனாகவிருக்கிறான்; அக்கினி, வாயுக்களை அவமானப்படுத்தியதுபோல இவனை அவமானப்படுத்தலாகாது' என்று கருதி மறைந்துவிட்டான். அப்பொழுது லக்ஷ்மீ தேவியானவள் உமாதேவியின் வடிவுடன் தோன்றினாள். அந்தத் தேவியைக் குறித்து 'இப்பொழுது என் முன்னிலையிற் தோன்றி மறைந்தயக்ஷரூபியார்? அடியேனுக்குத் தெரியுமாறு அநுக்ரஹிக்கவேண்டும்' என்று வேண்டினன்.

உமா:—இந்திரனே! உன் முன்னிலையில் தோன்றி மறைந்த யக்ஷரூபியானவன் ஸ்ரீய:பதியாகிய பகவானெனவறிவாய்; தேவர்களெல்லாம் அசுரரின் வெற்றி தம் சகாயத்தாலாயிற்றென்று அஹங்கரித்தார்கள்; அவர்களின் அகந்தையைப் போக்குவதற்காகப் பரமாத்மா யக்ஷரூபியாகத் தோன்றினன்.

இந்:— 'தேவீ! உம்மால் சந்தேகத்தினின்றும் விடுபட்டேன்' என்று மகிழ்வுற்றான். அக்கினி முதலான தேவர்களும் அஹங்காரத்தினின்றும் விடுபட்டார்கள்.

இந்த வரலாற்றையே மேற்கோளாகக் கொண்டு 'அவனன்றி ஓரணுவுமசையாது, என்ற பழமொழி வழங்கப்பட்டதுபோலும்.

மதிப்புரை.

தமிழ்ப்பேரகராதி:—சென்னைச் சர்வகலா சங்கத்தார் நீண்ட காலமாக விடாமுயற்சியுடன் பொருண்மிகச் செல விட்டுப் பதிப்பித்துவரும் இவ்வகராதியின் மூன்றாவது தொகுதியின் ஐந்தாவது பகுதி இப்பொழுது வெளியாயிருக்கிறது. இது தமிழ் உலகுக்கு ஓர் நல்விருந்தாகும். இதில் 'தம்பன குளிகை' யென்னும் மொழி முதல் 'திஷ்யம்' என்னும் சொல் விறுதியாகப் பயில்வோருக்குப் பெரும்பயனளிக்கத்தக்க எத்துணையோபல அரிய தமிழ்ச் சொற்கட்குப் பொருள் எழுதப் பெற்றுளது. இஃதன்றியும, பண்டைக் காலந்தொட்டு இன்றளவும் நகமும் தசையும்போல ஒன்றோடொன்றிணைந்து பயின்று வரப்பெறும் சில வட சொற்கட்கும் பொருளெழுதப்பட்டுள் ளது. எல்லோருக்கும் கைத்துணையாக இருக்கத்தக்க நூல் களுள் இதுவும் ஒன்றாகும். இப்பணி இடையீடின்றி நடத்தி வரும் அதிகாரிகளின் நன்முயற்சி மிகவும் போற்றத்தக்கதே 181 பக்கங்களுள்ள இப்பகுதியின் விலை ரூ. 2—0—0.

வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்க.

THE MADRAS LAW JOURNAL OFFICE,
Post Box 604, Mylapore, Madras.

பத்திராதிபர்